நூதன பெரிய பலபேர் பாடிய

# ஒப்பாரி



B. இரத்தின நாயகர் & சன்ஸ்

26, வெங்கட்ராம தெரு, மிண்ட்,
சென்னை - 79. போன் : 2520 6622

நூதன பெரிய பலபேர் பாடிய

ஒப்பாரி



B. இரத்தின நாயகர் & சன்ஸ்

26, வெங்கட்ராம தெரு, மிண்ட்,
சென்னை - 79. போன் : 2520 6622

நூதன பெரிய பலபேர் பாடிய

# ஒப்பாரி

பல வித்வான்களால் இயற்றியதை
உரிகம் ராபர்சன்பேட்டை புத்தக வியாபாரம்
**த. வே. பொன்னுரங்க முதலியார்**
கேட்டுக்கொண்டபடி

குனா-முனிசாமி முதலியார் பாரியாள்
**அம்மணி அம்மாளிடம்**
சர்வ சுதந்தரம் பெற்று

**B. இரத்தின நாயகர் அண்ட் சன்ஸ்**
அவர்களால் பதிப்பிக்கப்பெற்றது.
26, வெங்கட்ராம தெரு, கொண்டித்தோப்பு,
மின்ட் போஸ்ட், சென்னை-79.

பதிப்புரிமை] [விலை ரு. 12.00

நூதன பெரிய

# பலபேர் பாடிய ஒப்பாரி



### விநாயகர் துதி - வெண்பா

ஆனைமுகனே அருளைங் கரத்தோனே
வானவர்கள் தான்புகழும் மன்னவனே-கானமயில்
வேலவர்க்கு முன்பிறந்த வித்தகனே பாடவரம்
பாலனுக்குத் தந்தருட்கண் பார்.

### விநாயகர் துதி - ஒப்பாரி

சங்கரனுரீன்றெடுத்த ஐங்கரத்துமுகத்தோனே
சண்முகப்பிள்ளையாரே யுண்மையுள்ள விநாயகனே
சத்திவிநாயகனே உத்தமியாள் புத்திரனே
செகமெங்கும்புகழ்படைத்த மகிமையுள்ள கணபதியே
சருவா திஜெனங்களுக்குங் குருவாயுதித்தோனே
சகலகலைவல்லோனே பகல்போலநிறைந்தோனே
சட்டமுடனேயுமக்கு திட்டமதாவேணதுகள்
சர்க்கரை அவல்கடலை மிக்கநல்ல எள்ளுருண்டை
சமைத்தயிட்டிலிதோசை சுவைக்குமதிரசம்
சண்முகப்பிள்ளையார்க்கு உண்ணும்படியமுது
சம்பங்கிசம்பா வெம்மைநிறப்பால்சம்பா

சனபோகசம்பா யினமானநல்லசம்பா
ஏர்க்குளிசம்பா அற்புதமானசம்பா
சங்கையிலுயர்ந்தசம்பா தங்கநிறமானசம்பா
சாத்துவோலைச்சம்பா நேர்த்தியானபூஞ்சம்பா [பா
சராசரத்தைக்கண்டசம்பா நிராநிறத்தையாண்டசம்
சகலசம்பாவகையில் பெருமையுள்ளசோடஞ்சம்பா
சர்க்கரைப்பொங்கலிட்டு நற்கையாலேதொட்டு
சாதிதேங்காயுடைத்து மேதினியில்பலவகைகள்
சரிந்தமுந்திரிக்கனியும் நிறைந்தபலாக்கனியும்
சரவாழைக்குலையும் நிறமுள்ளமாங்கனியும்
சகலபழமும்பரப்பி பால்விளக்குமாவிலிட்டு
சத்திதரும்சிவந்தி வித்தைபெரும்விசுகோந்தி
சமைத்தகொண்ணத்தும்பை மன்மதயிக்கதம்பை
சாதிஅருகுபச்சை உச்சிதமானநிச்சை
சாதிபச்சைதுளசி மேதினியில்மணம்வீச
சந்தனங்கஸ்தூரி புனுகுகந்தபரிமளத்தர்
சரமல்லிகுடமல்லிகை வாசமுள்ளசெவ்வலரி
சாத்தலரிகோத்தலரிநேர்த்தியானமலர்களெல்லாம்
சரியாகக்கொண்டுவந்து பிரியமுடன்பிள்ளையார்க்கு
சாம்பிராணிகற்பூரம் தீம்தாமெனவெனவே
ஓம்கணபதியாயநம யேகதந்திராயநம
ஏகசுந்தராயநம யேகபிலாயநமவென்று
சாற்றியேகைகட்டி போற்றியேயான்பணிந்தேன்
சருணுகமேள தாளம் திரமானகின்னுரம்தமுகு
சவிளிகடுக்கன்மேல் குருகுவொளியாம்வயிரமுடி
சப்பாணிபிள்ளையார்க்குத் தப்பாமல்தலைகட்டி
உருவாமல்சலியாமல் கொண்டுவந்தமாணிக்கம்
புஷ்பராககோமேதகம் சங்கிரர்க்கும்மானுர்
ஐந்துகரத்தோனே ஆனைமுகத்தோனே



## இலாவணி

அப்பளமுதலவல் கடலைதோசை
அரியாதாம் பச்சை
அரும்பராகுங் கடலைமொச்சை
செப்பிடுங்கடலை சுண்டல்கள்மோதகம்
தினமாங்கரும்பச்சை அளவின்றி
செய்திடும்மாம்பச்சை

## உத்தார்

திப்பியோமாங் கொட்டைக்கருணி
அன்னஞ்செய்து அன்னஞ்செய்துநான்
திரியாய்வாழையிலையி லவல்பெய்து
யவல்பெய்து யான்
அப்பணியீசனருள் மகன்தானே
அணிந்து பணிந்துநாடி
மதனதுதிருக்கதை தன்னைப்பாடி

## அஷ்டதேவதை ஒப்பாரி

ஓமென்னவுச்சரித்து ஆமென்றுநிச்சயித்து
ஓதுவேன்மதன் கதையை மாதுரணதுர்க்கைவீரி
ஓரிமசானருத்திரி வகிடாடேரிசூரி
ஓங்காளிசாமுண்டி சகசகண்டி நீலகண்டி
ஓட்டிகரப்பிகாளபயிரவி குட்டிசாத்தான்தூமாதேவி
ஓடிவாயிருசிபயிரவிபகவதிகூடியாயினிராயிமகமாயி
ஓசந்தயெல்லக்காமல்லக்கா இசந்தபொம்மக்காயெல்
உதிரகாட்டேரி சூளிபிதிர்தேவதைபிடாரி [லக்கா
உத்தண்டிகுளிர்பேச்சி பத்திரகாளிமாரி
உதவாமூதேவியிருளி யிசுவாவராகிதுர்க்கி
ஒளிதரும்சக்காதேவி பலிகொள்ளும்காத்தவராயா

ஒண்டிமுனிசண்டிவீரா சண்டப்ரசண்ட துண்டா
ஒப்பா தமிருசாகரப்பா அப்பா அனுமாபேதா
ஓடிவா நீங்களெல்லாம் பாடியேபாலனுக்கு
ஒத்தாசையாயிருந்து சத்துருக்களில்லாமல்
ஒருநிமிஷநேரமட்டுங் குறைவொன்றும்வாராமல்
உதவிசெய்யவேணுமென்று விதமாகவுங்களுக்கு
ஒன்பதுயிரல்பிரட்டி ஐம்பது ஆட்டுக்கரியை
ஒருவிதகொழும்பாக்கி அறுபதுகோழிபொரித்து
உருண்டைகைமாகவாப்பு
திரண்டரொட்டிகளனந்தம்
உப்புகருவாட்டுப்பொரியல் அப்பளகஞ்சாசுருட்டு
ஓர்நிறைந்தபீப்பாயில் நேர்நிறைந்தசாராயம்
உதிரம்பிரட்டியுங்கள் எதிராகயான்படைப்பேன்
உறுதியுடன்வாங்கியிப்போ பிரதிமொழிசொல்லாமல்





## மதன் சரித்திர ஒப்பாரி

அரியமாயனின்றெடுத்த பரிபாலங்கஜர்க்கு
அத்தர்புனுகதனுல் மெத்தமுழுகவிடுத்து
அபரஞ்சிபட்டதனுல் விபரீதமாய்த்துடைத்து
அர்ச்சதிருநாமமிட்டுப் பச்சைதொங்கல்முருகு
ஆணிப்பொன்கடுக்கன் காணிக்கையாய்பூட்டி
அசையுமிருபுறத்தில் புஜகீர்த்தியுந்தரித்து
அகண்டதிருமார்புதன்னில் துவண்டமுத்துமாலைக
அஸ்தகடகமுடன் தஸ்தகணையாழி [ளும்
அப்புயபாதமதில் கெம்பீரதண்டைமிஞ்சி
அங்கஜர்க்குநாண்பூட்டி மங்களமென்றுநாட்டி
ஆதிசத்திபார்வதியும் சோதிலட்சுமிதேவியரும்
அல்லவருந்தான்கூடி மெல்லிரதியாள் தனக்கும்
ஆற்றில்ஜலமெடுத்து நேர்த்தியுடனேவிடுத்து
அபரஞ்சிபட்டதினுல் விபரீதமாய்துடைத்து
அனேகவிதமாய் ரதியையலங்கரித்து
அங்கஜவேள் துலங்குவிடமதுபுரம்
அமரர்உட்காரவைத்துச்சமர்த்தமன்னர்தேவர்களும்
அம்பிலமாக அரசாணிமுன்பாக
அருந்ததியைப்பார்த்து வருந்தியேகைகோர்த்து
அக்கினியைசாட்சிவைத்துத் திக்கென்றுதன்குருவே
அரிஅரனையும்நினைத்துப் பரிசேனையும்தணிந்து
அரிவோம்சிவாயவென்று பரிசேனையும்தணிந்து
அணிந்தாரேரதிகழுத்தில் கணித்தமதனெல்லவரும்
அல்லவர்க்குத்தெண்டனிட்டு வல்லவனும்ரதியும்
அன்னத்தின்மீதில்ரதி கன்னியரையேந்திவைத்து
அர்சுதனுர்தன்மகனைப் பச்சைக்கிளிமீதில்வைத்து
அதிகவைபோகத்துடன் பதிதனில்கோலம்வர
அண்டங்கிடுகிடென்ன மண்டலத்திலவர்கள்மின்ன

ஆலஞ்சுழற்றிவிட கோலம்வந்ததின்பிறகு
ஆணிப்பொன்பந்தலிலே மாணிக்கப்பாய்விரித்து
அதிலேயிருவரையும் ரதியும்மாறுடியபின்
அண்டர்முனிதேவர்களுந் பெண்கட்குமேயமுது
அளித்துத்தாம்பூலமே களித்தமலர்வாழ்த்திசெய்ய
ஆதிசிவனப்போது சீதனமாய்ப்பெண்ரதிக்கு
அயோத்தியாபுரத்தைச் சீராகவேமுடித்து
அங்கஜர்க்குமுடிசூட்டி மங்களஜெயமென்று நாட்டி
அன்பாகவாழ்ந்திருந்தார் இன்பரதிமன்மதனும்
ஆட்சிகாமாட்சி விசாலாட்சிமீனாட்சியும்
நாட்டிவதனமெச்சி சூட்சியெனுவாரிடச்சி
ஆர்விழிச்சிகார்புரட்சி பேர்கடச்சிகார்நடச்சி
ஆரணத்திகாரணத்தி சீரணத்திநாரணத்தி
அம்பாஜெகதாம்பா மீனும்பாவென்பாலமர்ந்த
ஆதிசத்திபத்மினியாள் சோதினின்பதத்தால்
அம்பிகைபெண்வாணியவள் இன்பமுடனின்றெடுத்த
அரிவைசிகாமணியே பரிவைசிரோமணியே
அழகுமனோன்மணியே திகழுமென்கண்மணியே
அன்னரதிருயிலே வர்ணமயிலேஉனது
அமைந்தசித்ர பதத்தைநான்
மதித்துகவி சொல்வேனடி
அருங்கூந்தலுக்குநிகர் கருக்கொன்றைதாருருளும்
அண்டுகூந்தல்பனியும் தண்டுளவும்கார்மணலும்
ஆர்பொருத்தவண்டினமும் சீர்பொருத்தமில்லையடி
அழகுமூன்றாம்பிறையோ பிலகுநெற்றிக்கிணையென்
அறைந்தாலுமொவ்வாது குறைத்துவுயர்ந்திடுமே
அரும்புருவம் வெண்பிறையோ
கரும்புருவமே எனக்கு
அடருங்குமிழ்செண்பகமோ திடமுள்ளனுசியடி
அற்புதமேஉன் காதுரெண்டும்
பொற்புவள்ளி கத்தரியே



அமைந்தகன்னம்கண்ணாடி சமைத்தசரசாணையடி
அந்தமுள்ள பல்வரிசை சமமில்லாதேபவளம்
ஆணமுத்துகோர்வையடி தோணுமுந்தன்பல்வரிசை
தங்கமேநீநகைத்தால் எங்கும்பிரகாசமடி
ஆடும்மயிலினமே தேடும்திரவியமே
அமுர்தகண்தேனு குமுர்தமொழிக்கொவ்வாது
ஆசாரசொல்லழகி நேசமுடனழகி
ஆனந்தமேகொடுக்கும் மோகனப்பசுங்கிளியே
அம்புலியைத் தோற்கடிக்கும்
சம்ப்ரமுள்ள உந்தன்முகம்
அசைந்தமூக்கோரதியே வொசந்தகவரிகழுத்து

## இதுவுமது

அயன்படைத்ததோளழகை நியமித்துச்சொல்வனடி
ஆதிசேடனுமதிப்பான் மாதரசேஒத்ததங்கை
அடர்ந்துதிரண்டுவிம்மி உருண்டெழுந்தகொங்கை
அம்பொன்குடங்கலசம் பம்பரம்பந்துகிண்ணம்
ஆணிமொக்குசெப்பனிட்ட மணிமொக்குபூங்கலசம்
ஆருமென்றாலுமது போகசுகமில்லையடி
ஆலிலையென்றாலும்வயறு சாலப்பருத்திருக்கும்
அந்திரமின்னற்கொடியை
நிந்தைசெய்யு முந்தனிடை
அரியபிரமாதிகளுஞ் சுரர்முனிவர்சித்தர்களும்
அந்தணர்புலவர்களும் இந்திரனுஞ்சந்திரனும்
அல்குலுக்கிணையி தென்று
சொல்வதற்கு மாளாது
அரிந்துரித்த வாழைத்தண்டும்
பெருத்தயானை தும்பிக்கையும்
அபரஞ்சி யிழைத்ததூணும்
உபயோக ஸ்தம்பமென்னும்
ஆரணங்கே யுன்துடைக்கு
நேராகுமென்றாலும் உன்துடை
அடுக்காதுமோகனமே கிடைக்காதுபொக்கிஷமே

அலவனைப்பங்கமிடும் இலகுமுழங்காலிடையே
அங்கமேஉடன் கனுக்கால்
என்னவென்று யானுரைப்பேன்
ஆய்ந்தவிராலெனினுஞ் சாய்ந்தொப்பமென்றிடினும்
அரிவையரேவுந்தனுக்கு கந்தமலர்மாந்துளிரோ
அரவம்படமெனினுங் கருடன்கண்டால்பயந்து
அருண்டுசுருண்டுவிடும் திரண்ட'மதிமுகத்தில்
அந்திவண்ணன் பெற்றெடுத்த
சுந்தரமுள்ள பெண்ரதியால்
ஆயிரங்கண்ணிந்திரனும் நேயமுடனேயெனக்கு
அனுப்பியவோலையிலே தனிப்படவாருமென்று
ஆகையினாலேவிதற்குப் போகவிடைதரவெனக்கு
அடிமையிலேயென்றுரைத்தார் பிடிவாதமாய்மதனும்





## இரதி சொல் தர்க்க ஒப்பாரி

அங்கம்பதறிடுது திங்கள்முகம்பார்த்து
அல்லவேயென்கணவா மெல்லியர்க்குற்றுணர்வாய்
அரனார்மருமகனே திருமால்தருஞ்சுதனே
அடியாளை இங்கேவிட்டுக் கெடுமிந்திரன்சொல்கேட்
அங்கஜனே நீர்போனால் இங்கேபுலம்பிடுவேன் [டு
அன்னந்தண்ணீர் விடுவேன்
என்எண்ணமே பிடிப்பேன்
அரை நாழிஉனைப்பிரிந்தால் நிறையில்குறைந்திடுவே
அல்லும்பகலுமுந்தன் சொல்லைநினைந்திடுவேன் [ன்
ஆனாலும்உன்பிறகே நானும்வருவேனருகே
ஆகமவிதிப்படிக்குத் தோகைரதியும்வணங்கி
ஆசாரசோடசோப சாரமுடனேதொழுது
அடுத்துத்தடுக்கையிலே துடித்துமதனேதுரைப்பார்

## மன்மதன் சொல் ஒப்பாரி

அழகைப்படைத்தவளே புழுகையணிந்தவளே
அல்லிமலரின்சரமே மல்லிகைப்பூரணமே
அமுதமொழியாளே குமுதவிழியாளே
அன்னநடையழகி என்னுடனேபழகி
ஆசைகொடுத்தபெண்ணே பாசமிருந்தகண்ணே
ஆயிரம்பொன்மாற்றுபெற்ற நேயபதுமையொன்று
அமைத்துத் தருகிறேன்யான்
சமைத்ததின் முகம்நோக்கி
அலங்காரமாயிருக்கும் நலங்குலைந்துவாடிவரில்
அவ்விடத்திலெந்தனுக்கு வல்வினைவந்ததென்று
அறிந்துசொல்லென்றுரைக்க தெரிந்துரதியுங்கலங்கி
அய்யகோவென்றலறி கையைப்பிடித்துக்கொண்டு
ஆதிசிவன்தன்மகளும் ஏதுரைப்பாளப்பொழுது

## இரதி சொல் ஒப்பாரி

காமராஜேந்திரனே பூமானேசீமானே
சூரியவன் தன்மகனே அரிவையர்க்கிசைந்தவனே
கட்டழகனேமதனே தொட்டணைந்தகோமானே
கன்னிபிராயமதில் சின்னஞ்சிறுவயதில்
கலியாணம்செய்துமுன்னே யிலகுபருவத்திலென்னை
கட்டியணையாமல் இஷ்டமுடன்வாழாமல்
கருதுமிந்திரனனுப்பும் பெருந்தூதர்கொண்டுவந்த
காகிதத்தைநீபார்த்து ஆயுதங்களையெடுத்து
காரணரேபோரேனென்று ஆரணத்திலில்லாத
கருத்தையுரைக்கலுற்றீர் ஒருத்திதனித்திருக்க
கால்வழியுன்னைவிட்டு மால்மகனேவேறுபட்டு
கலைபிரிந்தமானதுபோல் மலைவிழுந்தவீடதுபோல்
கணவனில்லாபெண்ணைப்போல் மணமில்லா
[பூவைப்போல்
கதிரில்லாவானம்போல் எதிரில்லாவீரனைப்போல்
கார்மழையில்லாப் பயிர்போல்
நேரிழையில்லா மானைப்போல்
கற்காத வித்தையைப்போல்
நிற்காத பகுதியைப்போல்
கரும்பைவிடும் ஆலைப்போல்
விரும்புவார் மாதரைப்போல்
கவிசொல்லா வானரைப்போல்
சிவமில்லா ஞானியைப்போல்
காற்றில்விட்ட பாய் மரம்போல்
சேற்றில்நட்ட கம்பம்போல்
கலங்கிஅழுதிடுவேன் புலம்பிதலங்குலைவேன்
கர்த்தனே நாமிருவர் நித்தமனமகிழ்ந்து
கலந்துயிருப்போ மென்றுள்
துலங்குமந்த பெண்ரதியாள்



## இரதி சொல் லாவணி

கல்லுங்கரையுமுர்கன் கடின
மனதுகரையா தென்னபாவம்
காலபருவமதில் கணவனைப்பிரிந்தால்
காரியமென்ன லாபம்

### இதுவுமது

கொல்லுங் காமமெனக்கு
மீறியேயானதால் குணமேவேறாகும்
வென்றழுது வுன்னுசையினாலே
குறைவே னுயிர்போகும்

### இதுவுமது

அன்னம் பொசிக்கேன்
அரண் பணையி லிருக்கேன்
அரனிடம் நீர்போனால்
ஆலைக்கரும்புபோ லலைந்திடுவேன்
அறியாதவனோ

மன்னுவுனக்கு மனம்வெறுத்துப்போச்சோ
மனையாட்டியின்மேலே
மாதாபிதாகுரு தெய்வமும்நீரே
மாலையிட்டதினாலே

சர்வலோகமும் சர்வஜீவமும்
சர்வமயமும் சிவமே
தாட்சியமார்பேச்சை கேட்டீரானால்
தணலாவது நிஜமே

மாணிக்கவச்சிர நீல ஆணிப்பொன்கட்டிலிலே
மகாவுச்சித மெத்தையின்மேல்
செகமெங்குமே மணக்கும்
மல்லிகைமுல்லைமலர் உல்லாசமாய்ப்பரப்பி

மத்தாப்புசால்வையே விஸ்தாரமாய்ப்பரப்பி
மருவுபன்னீர்புனுகுசிறு சவ்வாதுமேல்தெளித்து
மகிழ்ச்சியுடன்படுத்துப் புகழ்ச்சியுடனிருந்தால்
மாதவன் தவமகிழ்ந்து தீதேதுமில்லாமல்
மருவவாரே னென்பார் கரியமால்தன்மகனும்

மன்மதன் சொல் லாவணி

தேவர்சபைபோய் வருவேனடியேமானே
தென்றல்ரத மேறிதானே
ஆவலுடனழைத்த விவரங்கண்டுநானே

உத்தார்

பாவநாதித்தன் தவந்தனையழித்தின்று
பஞ்சமர்கணையும் கரமதில்கொண்டு
கோலமாரியண்டர் போற்றிடயின்று
குஞ்சரமேடலகம் புகழ்ந்திடசென்று

தேவர் சபை

போகாதிருந்தால் ரிஷி முனிவர்கள்கூடி
புவிதனிலென்னைத்தேடி
போகரதியார் வருந்திடும்நாடி
சாபங்கொடுப்பாரே தேடி

உத்தார்

பாகசாதனெடுப் படைகொண்டுநானே
பைங்கிளியேகயிலை மலைச்சென்றுநானே
வேகமாகபோகத் தடுக்காதேமானே
விதியோனமைத்தபடி வருவதடிதேனே

தேவர் சபை

மாரன்கணை தனை ஜெயிப்பவர்களுண்டோ
மலர்க்கணைக் கிணையுண்டோ
தீரமெந்தன்மொழி யில்லாமல்படைப்பதுண்டோ
தேன்மொழியே சொல்ரெண்டோ



உத்தார்

காரணகாரிய மெனையன்றிவேறே
காணுமதோசிவன் தவமதின்நேரே
ஆரிழையேயழைத்து வருமெந்தன்தேரே
அரை நிமிடம்தருகாலே வரும்பாரே

தேவர் சபை

பாராதியண்டமும் நிறைந்திடும்புகழ்நேசம்
பரமசிவகுரு வாசன்
ஆராதாரமாக விளங்கிடும்பிரகாசம்
அரகரா முருகேசன்

உத்தார்

மாராகருணை மொழி குமரேசவேலையன்
மாசில்லாதசுப்பிரமண்ணிய பன்னிருகையன்
சீராருமவர்சிடன் குழந்தைதவேல்மெய்யன்
செகம்புகழ்ந்திடுங் கவிபார்த்துஇன்னேரம்

தேவர் சபை

நாயகனேயென்கணவா மாயவனருள்புதல்வா
நகராண்டமன்னர்களில் புகழும்நளச்சக்கரவர்த்தி
தருபீமராஜன்பெற்ற வருந்தமயந்தியென்ற
நங்கையைமணமுடித்து மங்களமுடனிருப்போர்
நல்லநிடதபுரத்தை யெல்லாமொருகுடைக்கீழ்
நகராண்டிருக்கையிலே விதமுடனேசனியன்
நான்கோரினபெண்ணை ஏனவன்மணஞ்செய்தான்
நல்லதாகட்டுமென்றுசொல்லியவன்தானெழுந்து
நாகம்போலச்சீறி வேகமுடன்புஷ்கரன்றன்
நன்னெஞ்சினிற்புகுந்து வன்னெஞ்சமாயவனை
நளராஜனுக்கெதிராய்த் தளபகடையாடவைக்க
நங்கைதமயந்திபார்த்து அங்கமெல்லாம்பதறி
நடுக்கமுடனேஅவனை நெடுக்குஞ்சூதாடுவது

நமக்குச்சரியல்லவித முமக்குஅழகல்லவென்று
நமஸ்கரிக்கிறேனென்று தமயந்தியும்நின்று
நால்வேதசாஸ்திரத்தின் நூல்வழிஎல்லாமுரைத்தும்
நளராஜன்கேளாமல் திறமாயவர்துணிந்து
நாடுநகரம்வர வோடுமுதலுள்ளதெல்லாம்
நஷ்டமாய்சூதாடி இஷ்டமாய்த்தோற்றுவிட்டு
நாயகியைப்பிரிந்து நேயரிதுபர்னனிடம்
நஷ்டகஷ்டங் கணேப்பட்டுக்
கெட்ட லேந்து சேர்ந்தாரே
நாதா பெண்வார்த்தைதனைத்தீதாயென்ணுதேநினை
நல்லபுத்திதானுரைத்தால் குல்லபுத்திநீநினைத்து
நடக்காதே யென்றுசொன்னுள்
அடக்கமாய் பெண்ரதியும்

## இரதி சொல் லாவணி

மன்னு நானென்ன செய்குவேன்
யெனேப் பிரிந்தால்
மன்னு நானென்ன செய்குவேன்
மன்னு யெனேப் பிரிந்து
தன்னந் தனியேபோக
யென்னுதப்பிதஞ் செய்தேன்
சொன்னு லல்லவோ தெரியும் (மன்னு நா)

சின்னஞ் சிறுவயதில்
யென்னேத் தேடி
சீர்மாலேயிட்டு வைத்தீரே
நன்னயமாக வுந்தன்
கன்னல்வில்லேயெடுத்து
உன்னதமாகப் போறீர்
என்ன காரணத்தாலே (மன்னு நா)



## மதன் சொல் லாவணி

கலாபமயிலேகுயிலே கலாபஒயிலேகயலே
கற்பகமேசொற்பகமே அற்புதமேவிற்பனமே
கண்மணியேசிரோமணியே பொன்மணியே
[மனேன்மணியே
கருத்தீலிசைந்தமட்டும் விருத்திக்கச்சொல்வனடி
கார்புவியில்வாழ்க்கையிது நீர்மேல்குமிழியடி
கருவுகள் தொண்ணூற்ருறு நரம்புசவ்வுமூளேயுடன்
கால்ரெண் டுடையபொம்பை
மேல்கொண்டெடுத்து நம்மை
கதிமோக்ஷவழியைவிட்டு மதிகெடுக்கச்செய்யுமடி
கண்ணுக்குப்பார்வையடி மண்ணுக்குள் நாற்றமடி
கசுமாலபண்டமடி விசுவாசம்வையாதே
கடும்வாழ்வைநம்பாதே படுகுழியில்தள்ளிவிடும்
காரிகையேதேவர்சபை நேரிழையேநீயனுப்பு
கற்பகாலம்வரைக்கும் அற்புதமாய்பேர்விளங்கும்
கலங்காதேயென்றுசொன்னுர் இலங்குந்திருமகனும்

## மதன் சொல் லாவணி

## தொண்டிச் சிந்து

திருமால் திருமகனே ஆ ஆ
திருமால் திருமகனே உனக்கு
சித்திரப்பதுமையும்
விசித்திரமாய்
பருவயினவயதாய் இன்ப
ரசநேசப்பிரகாசமுமாய்
தருகிறேனுச்சிதமாய் அதனேத்
பாவித்துயெனேப்போல
பாவித்திரு ஆகா
திருமுகம்வேருகினுல்
திருமுகம்வேருகினுல் எனக்கு

தீதென் றறிந்துகொள்ளு மாதரசே
தனத்தோம் தனதனனம்
தனத்தோம் தனதனனம்

### இரதி சொல் நொண்டிச் சிந்து

ஆகா
சித்திரப்பதுமையுமே
சித்திரப்பதுமையுமே கையாலே
சின்னக்கம்பத்தைப்
அ
பிடித்திடுமோ கா
முத்தங்கொடுத்திடுமோ
மோ கரஸமெனக் கீய்ந்திடுமோ
நித்தம் பதித்திடுமோ வாயாலே
நேசவுல்லாசமாகப் பேசிடுமோ
பத்தாவே உந்தனைப்போல் அமிர்த
பக்ஷிக்குமோ யென்னை
(தனத்தோம்
ரக்ஷிக்குமோ

### மதன் சொல் லாவணி

நீயு
பெண்ணரசே கேளடி
பேதைமனது கொண்டாடுகிறாய்
மண்ணகமும் நகைக்கும் நின்மொ
மலரதினிலொரு செண்டுகட்டி
வண்ணமுடன் தருவேன் அதனி
வாசனை விட்டுமே வாடிவரில்
அண்ணல் சிவன்விழியால் எனக்
ஆபத்துவந்ததென் றறிந்துகொள்ளு (தனத்தோம்

### இரதி சொல் லாவணி

யென்னை
தொட்டணைந்த கணவா
விட்டேகினும் ஒய் கட்டமுகா
பட்டணம் விட்டிடுவேன் யென்னிட



பாங்கிகளைவிட்டேகிடுவேன்
கட்டை யடுக்கிக்கொண்டு உடலை
கட்டையிலே வைத்து
எட்டாமாவேன் யென்
மட்டில்லாமாணிக்கமே யென்
இஷ்டப்படியே யிருந்திடுவீர் (தனத்தோம்)

### மதன் சொல் லாவணி

பஞ்சணை மெத்தையின்மேல் ஆகா
பஞ்சணை மெத்தையின்மேல் அன்புடன்
படுத்துமுத்தம்கொடுத்த கனிரசமே
ரஞ்சிதமே தனமே கனமே
ரத்தினமே விசித்திரமே
நெஞ்சங் கலங்காதே இருவரும்
நித்திரை செய்யலாம் உத்தமியே
வஞ்சியே அபரஞ்சியே உன்னிட
மைதீட்டுங்கண்கள் கலங்காதே (தனத்தோம்)

### இரதி சொல் லாவணி

நித்திரை செய்யவிட்டு ஆகா
நித்திரை செய்யவிட்டு நடுச்சாம
நேரத்திலே போகநீருரைத்தீர்
சித்துவித்தை யிதுகாணும் யாணும்
சிறுபொழுதினை கற்றவள்தான்
உத்தமனே யெனக்குச் சத்திய
உறுதிகொடுத்தால் உறங்கிடுவேன்
மித்தகனப்பாவுன்சொல் தப்பாமல்
விட்டுயிந்திரன் சொல்
கட்டிடுவீர்
(தனத்தோம்)

## இரதி சொல் தர்க்க ஒப்பாரி

புண்ணியனேஎன் கணவா மண்ணுலகிலேயிருக்கும்
பொன்னைவிடுமோ நிறமும் தன்னைவிடுமோ நிழலும்
பூவைவிடுமோ மணமும் நாவைவிடுமோருசியும்
பூதம்விடுமோ பணத்தை வாதம்விடுமோகுணத்தை
புழுதிவிடுமோ நிலத்தைநிழலும்விடுமோமரத்தை
போரைவிடுமோ நிலை நீரும்விடுமோ அலையை
பொருளைவிடுமோ ஆசை மருளைவிடுமோபூசை
புண்ணைவிடுமோஉதரங் கன்றைவிடுமோபசுவும்
புனுகைவிடுமோவாசம் கிளையைவிடுமோ கிளிகள்
பூனைவிடுமோஎலியை தேனைவிடுமோஈயும்
புருஷன்விடுவானோபெண்ணை அரசனே நீருமென்னை
பொட்டனவேவிட்டுயிந்திரன் இஷ்டப்படி நீபோனால்
பூதலத்தில்யானிருக்கேன் ஆதரவாரெந்தனுக்கு
புவியிலடுக்காதுமன்னு பாவியிருந்தாலுமென்ன
போதேநாமிருவர் ஏகபோகத்துடனே [ரப்
பொங்கமுடன்வாழ்வோமென்றுள்மங்கைரதியன்னே

## மதன் சொல் ஒப்பாரி

சங்கரனுர்திங்களணி கங்கையணிமங்கைபாகன்
சாம்பசிவனுரீன்றெடுத்தபூந்தேன் மலரழகேயெந்தன
சரசரதியாளே சரசவனபெண்ரதியே
சய்யோகரஞ்சிதமே ஒய்யாரமானகண்ணே
சகத்தில்மாதர்களிசைத்த சுகந்தருஞ்செந்தேனே
ஜாதியிலுயர்ந்த மல்லிகையே
ஜோதிமயமான கண்ணே
சல்லாபரதியாளே சொல்மொழியைக்கேளாயோ
சராசர நிராமயமானுேர் பராபரவஸ்துவானுேர்
சண்முகனையீன்றயீசன் கண்மூடிசெய்தபத்தால்



சட்டமுடனேயீசன் விட்ட அனல்தணிந்து
அணைமதனில்வாரேனடி மயங்காதிரடி
சரசகொடி வில்மாறன் புருஷனவர்தானுரைக்க
சடையாண்டி யீன்றெடுத்த
பேடைரதி யேதுரைப்பாள்

## இரதி சொல் ஒப்பாரி

சாரங்கபாணிபெற்ற ஒய்யாரமேனியனே
சரசசம்மாரலீலா என்வசனகெம்பீரலோலா
சாமிமதவேள்துரையே பூமிசைஎன்னைவிட்டு
சமராபுரிபோறேனென்றீர் அமரர்குறைதீர்ப்பேனென்
சதிராகஉந்தனையா ளிதுகாலம்நம்பியிருந்தேன் [நீர்
சதிசெய்துநீர்போனுல் இரதியானலைந்திடுவேன்
சதுர்புஜனேஎன்கணவா நீர் போகவேண்டாமென்று
சாதித்துரைத்திடவோ நீதியுள்ளயென்துரையே

## மன்மதன் சொல் வசனம்

சண்டாளன் போலச்சீறி
கொண்டல்வண்ணன் தன்மகனுர்
சலித்தழுதரதியாளே மதிகேடோவுந்தனுக்கு
சகியேஉன்னுடையமையல் கொண்டுநானிருந்தால்
சமயமில்லைஇப்பொழுது உத்யோகசபைக்குயென்று
சடையுடைய ஈசன்பேரில்
நான்-ஐந்துமலர்க் கணைதொடுத்து
சங்கரனுர் தவமழித்துயான் மங்களமாய்வாரேனென்
சப்தரிஷிகளும்நடுங்க அஷ்டதிசையும்குலுங்க [று
சட்டென்றுதான்கிளம்ப கட்டழகிபெண்ரதியாள்
சால்வையைதான்பிடித்து மேல்விழுந்துமுத்தமிட்டு
சாரைபோல்நெளிந்து காலில்விழுந்தழுது
சாகவேபோறீரோ திரும்பிவரப்போறீரோ [கேள்
அச்சுதனுர்கண்மணியே பக்ஷமுடன்சொல்வதைக்

சங்கரனூர்என் தகப்பன் கங்கையணிமங்கைபாகன்
சாம்பசிவனூர்தவசை லிப்புடனழிப்பேனென்றீர்
சபதமிட்டுநீர்போனுல் அபதம்வந்துநேர்ந்துவிடும்
சராசரமண்டலமெல்லாம் ஒருமிக்கக்காத்துவரும்
சாமிமேல்படைதொடுத்த பேர்களிந்தபூமியிலில்லே
சாமிபகையாகாது பூமியிலிருப்பவர்க்கு
சரசம்போலே நீநினைத்தால் விஷந்தலைக்கேறிவிடும்
சடுதியிலிறங்காது நீபடியில்மடிந்திடுவீர்
சங்கையல்லவுந்தனுக்கு மங்கைசொல்லைதடுக்காதீர்
சலித்துப்புரண்டழுதாள் சங்கரியாள்பெற்றபெண்

மதன் சொல் ஒப்பாரி

அகிலபரிமளமே வொயிலானேமானினமே
அஞ்சுகமேபஞ்சவடி கொஞ்சுங்கிளிவாகனமே
ஆனுலும்பெண் ரதியே தேனேநீகேளுமடி
அண்டத்துத் தேவரெல்லாம்
இந்திரன் ராஜசெங்கோல்
அவரேறும்வாகனந்தான் அதிகபலமுள்ளதடி
அலங்காரதாழ்வடராய் செங்கருடன்வாகனத்தோன்
அரியதாயிருக்குமந்த கரியகுடவெள்ளானை
அன்றொருநாள்வெள்ளானை தண்ணீர்குடிக்கவேதா
அடர்ந்ததாமரைசூழ்ந்த தடாகத்தைதேடிவந்து [
அடிவைத்துப்படியிறங்கி மடுவில்ஜலத்தையள்ளி
அமோகமாவுண்ணயிலே கொழுந்தனைக்காலைப்பற்
ஆழத்திலேயிழுக்க வேழமதுகூச்சலிட
அமரர்முனிதேவர்களே எம்பிரமநாதரே
அச்சம்வந்துநேர்ந்ததையோ வச்சிராயுதயிந்திரனே
அரகராபரமேஸ்வரா திரிபுரமெரித்ததேவா
அபயமபயமென்று அயிராவதங்கூச்சலிட
அந்த-ஆபத்துக்குதவாமல் தேவரெல்லாம்போக



அதுவிதிபால்வெள்ளானை துதிக்கைசலத்தில்வைத்து
அரண்டுபுரண்டழுகையில் அக்ஷணமேமேல்விழிய
அனுப்பிவிட்டார் சக்கரத்தை
அதலைசுதலனடுங்க முதலைக்கழுத்தறுக்க
அதுசிரசுதுண்டு துண்டாகபோயிடவே
அரிராமர்செய்தாரோடிஎன் ஆசைக்கிளிமொழியே
ஆனதோர்என்தகப்பன் அரிராமர்தானிருக்க
அச்சம்பயமில்லையடி மச்சத்தின்கண்ணழகி

இரதி சொல் ஒப்பாரி

அங்கஜனேஎன்கணவா சிங்காரநற்றுணைவா
அற்புதனேயென் தலைவா சற்குணவிவேகமுள்ள
ஆண்சிங்கமேகனமே தானணியும்பூஷணமே
அனைத்துசுகங்கொடுக்கு மண்ணவேஎன்துரை
அதிவதனே இரசவசனே என்ஆசைக்குகந்தமன்னு
அழகுபச்சைமேனியனே புகழுடையமார்போனே
ஆசைவிட்டீரோயிப்போ மோசம்செய்வதுமிப்போ
அன்பெல்லா மெங்கேவிட்டீர் இன்பமுள்ளஎன்
[கணவா
துரை தாழியும்மைவிட்டுப் பிரியலையே இந்தமட்டும்
ஆதரவாயெந்தனுக்கு மாதவனீன்றகண்ணே
அதிசிங்காரமுள்ள மதிவதனகெம்பீரா
அண்டர்சபையேநீர்போனுல் பெண்டீரலைந்திடவே
ஆதிபரன்என்தகப்பன் சோதிமயீஸ்வரனூர்
அங்கவீணையையேவுனது சங்கையல்லவுந்தனுக்கு
ஆதியிலேதிரிபுரத்தை பாதிமதியோடெரித்தார்
அதுபோலேதேருமையா அதிவீரமன்மதரே

இரதி சொல் லாவணி

அம்பரந்தன்னில்மூவருங்கூடி ஜெயம்பெற்ற
சரியாள்வாதுகள்பேசி தண்டர்கிளிகிளி

கலகலவென்றிட அண்டர்சூழும்புகழரசர்
மகிழ்ந்திடவிண்டுபாலமுதுண்டு மேலதைதூக்கியே
பரமன்மேல்பாணம் விடுத்தீரேயாமாகில்
பஸ்பமாகவேயுன்னை எரித்திடுவாரையா-பரிமள
சகலகினிவிருடென்ன டெண்டிட்ட
தாண்டவம் செயம்பெற்ற
காளியார்செயிப்பார் சிவனவர்

## இதுவும் ரதி ஒப்பாரி

மாரனேபரமனுட னேரொருவர்பேசினவர்
அப்பவேமுப்புராதிகளை
என்தகப்பன்தப்பாமல் தானெரித்தார்
அரனென்றுதெரியாமல் ஆதிபராபரன்மேல் [பதற
அக்கணையைநீதொடுத்தால் அவயவங்களெல்லாம்
அனலா யெரித்திடுவார்
ஆதிபராபரன்மேல் நீதியல்லகணைதொடுக்க
அடியாள்சொல்தட்டாதீர் வடிவழகுமன்னவனே
ஆனந்தமார்பழகா யேனிந்தவாதுனக்கு
ஆர்கலைத்தார் உன்கருத்தை பார்மீதிலே அறியேன்
அண்டர்சபைக்கேகாதீர்
ஆலிலைமேல்பள்ளிகொண்ட நீலமேகன் தன்புதல்வா
அறிந்தமட்டுஞ் சொல்லுகிறேன்
தெரிந்தமட்டு மொருசேதி
அன்றுமார்க் கண்டனுக்காய்
ஜண்டனைவிழ உதைத்தார்
அன்பன்சிறுத் தொண்டனுக்கு
இன்பமுடன் மோக்ஷம்தந்தார்
ஆதலாலவர்மீது வாதேனோ இப்பொழுது
ஆகாதுயென்துரையே போகாதீர்தெய்வசபை



அல்லவோ என்கணவா
சொல்லவொண்ணு கேளுமையா
அலண்டுபுரண்டழுதா ளன்னரதிகிளியாள்

## மதன் சொல் லாவணி ஒப்பாரி

பத்தர்முத்தர்சித்தர்தொழும் சத்தியேவாரத்திபர
சத்யமதவிர்ப்பனத்தி சத்தியமகாசத்திமாயே
சத்திஉக்ரசத்திவாலை சத்திசர்ப்பத்திபெற்ற
பத்தினியேவொருமொழிகேள்
பகரும்துவாபரயுகத்தில் ஜெகமாண்டராசர்களில்
பாண்டுமகாராஜன்மனைவி வேண்டியேபெற்றெடுத்
பஞ்சபாண்டவர்களவர் நெஞ்சங்கலங்காமலவர் [த
பத்தினிதுரோபதையை வித்தனமாமாலையிட்டு
பகையுண்டுகுரோதமுண்டு அகமுண்டுதுரியனுக்கு
பள்ளிக்கூடத்தில்கற்ற தெள்ளியவித்தையிலும்
பாதிநாடுகொடுத்த சேதிமிகத்தெரிந்து
பருவமுடனேசகுனி திருதமகாராட்டிரனுக்குப்
பசும்பொன்மணியதனு லிசைமண்டபத்தைசெய்து
பாண்டவரைத்தானழைத்து சிண்டியேகாண்பித்து
கபடாகருதாடி விகடகவிதுரியன்
பங்குராச்சியமதனையும் பொங்குசட்டிவோடுமுதல்
பற்றினதுபோதாமல் உத்தமர்கள்மனம்நோக
பாரசபைநடுவே கோரமாய்துரோபதையைப்
பங்கமாகநிற்கவைத்து அங்கத்திலேயிருந்த
பட்டாடைதனையுரிய நிஷ்டூரமாயவனும்
பச்சைமாலைத்துதிக்க விசித்திரமாகமாயன்

## இதுவுமது

பண்ணவேதுகிலனேகம் பெண்ணிடையேவளர்ந்து
பாரில்புரண்டிடவும் சீரியழுதிடவும்

பார்த்தவீமனர்ச்சுனனும் ஏர்த்தகதைதானெடுக்க
பதருதேதம்பியென்று சதுராகசொன்னதினல்
பனிரெண்டு வருஷங்காட்டில்
இனியொருவருஷம்நாட்டில்
பருத்த வனவாசஞ்செய்து
சிறுத்து எங்களிடம்வந்தால்
பாதிநாடளிப்போமென்று ஓதினன் துரியோதனனும்
பஞ்சபாண்டவரும்மெத்த நெஞ்சங்கலங்கியந்த
பாவைதுரோபதையுடனே மேவிநாளைத்தொலைத்து
பாதுகாத்தமாயனையே தூதனுப்பிபோர்முகத்தில்
பற்றிவந்தசகுனியையும்
வெற்றிபெற்ற துரோணனையும்
பட்டனென்றவீஷ்மரையும்வொட்டுப்படைகளையும்
பாவிதுரியோதனனையும் மோசியகர்ணனையும்
படைவீரர்படைவீரர் கொடிவீரர்முதல்வரையும்
பந்துக்களனைவரையும் நிந்தையாகவேகிருஷ்ணன்
பதினெட்டுநாளையிலே விதிகெட்டுப்போயிடவே
பக்குவமாகச்சக்கரத்தில் எங்கில்லாசேனைகளைப்
பஞ்சுபஞ்சாகசுட்டு வஞ்சகமாவிட்டு
பாரெல்லாந்தர்மருக்குச் சிருடன்முடிசூட்டி
பாரதமுடித்துப்பூமி பாரந்தனை தீர்த்தோன்
பாலபிரகலாதனுக்காய் கோலமாயிரணியனை
பங்கமாதின்றுகொன்று நரசிங்கரூபம்வந்தோன்

## இதுவுமது

பயந்தகஜேந்திரர்க்கு நயந்துமோக்ஷமளித்தோன்
பாணுசூரனைவென்றேனே காணுதஆகளிகையை
பாதத்தினலெழுப்பி கோதற்றகௌதமர்க்குப்
பாலிக்கவேகொடுத்தோன்
வாலியினுயிர் வதைத்தோன்
பாரிலனுமந்தனுக்குச் சாகாவரங்கொடுத்தோன்



பரபிர்மமானருபன் வரங்கொடுக்கும்பிரதாபன்
பண்ணுங்கோலத்தை நம்மால்
எண்ணப்படாது கண்ணன்
மத்தியிலேயிருக்க முக்கண்ணனென்னசெய்வார்
பயப்படாமல்உன்வாக்கு நயப்புடனேயுனக்கு
பளிச்சென்று சொல்லுமென்ருர்
களிப்புடனே மன்மதனுர்

## இரதி சொல் ஒப்பாரி

ஆதிமுன்னுளையிலே நீதியுடனே நடந்த
அதிசயமானகதை விதிக்குறேன்கேளுமின்
அன்புடனேகேளுமென்று இன்பரதியேதுரைப்பாள்
அயோத்தியையாண்ட பொய்யாவரிச்சந்திரன்
அரும்விஸ்வாமித்திரர்க்குப் பெருங்கடன்பட்டதினல்
அயோத்தியைக்கொடுத்துத் துய்யகடன்தீராமல்
அவர்மனைவிசந்திரமதி தவபாலன்லோகிதாசனை
அழைத்துக்கொண்டு காசிசென்று
தழைத்த பட்டணமேவி

## இதுவுமது

அவர்களிருபேர்களையும் கவனமுடன்விலைகூறி
அந்தணர்க்குவிலையாகி தந்தனிடத்தில்யாவரும்
அடிமைதொழில்புரிந்து கடனைக்கொடுத்துவிட்டார்
அந்தசந்திரமதிமகனும் சிந்தைமகிழவர்பின்னே
அடுத்தபாவனைபோல் உடுத்தியேயுன்பிறகே

## மன்மதன் சொல் ஒப்பாரி

காலகண்டர்யீன்றெடுத்த லீலாவிநோதமுள்ள
கற்பகமானபெண்ணே யற்புதமானமுத்தே
காமக்களஞ்சியமே கைலாசவாசகமே
கனகவொய்யாரமுள்ள கம்பீரமானவளே

கருத்துக்கிசைந்தவளே சிறுத்தயிடைரதியே
கற்கண்டுசர்க்கரையே பொற்கொடிமாதரசே
கண்ணின்மணியாளே பெண்ணுக்குள்ரத்தினமே
கங்காதரன்தவத்தில் மங்காமலேயுதித்த
கன்னியேபெண்ரதியே உன்னதமாமயிலே
கணவனுடன்வாது குணமயிலேஉதவாது
காணுமரிச்சந்திரனும் வேணபொருளிழந்தார்
கன்னிசந்திரமதியும் ஒன்றுந்தடுக்கலையே
கவனமாபஞ்சவர்கள் புவனமுழுதுந்தோர்த்தார்
கார்குழலாள் துரோபதையும்
பார்மீது தடுக்கலையே

### இதுவுமது

கன்னிகையேநீதடுக்க உன்னிதமல்லகுருக்
ககலான்தவசை கோலமுடனேயழித்து
கடுகியேவாரேனடி மடிமீதுநானிருக்க
கலங்காமல்நீயிரடி துலங்குமணிமண்டபத்தில்

### மன்மதன் சொல் லாவணி

சாம்பசிவனாரின் தவத்திலுதித் தே
சர்க்கரைபாலமுர் தே
வீம்புசெய்யாதே தேம்பியழுகா தே
விடடிவருமா தே

### இரதி சொல் லாவணி

உன்னையான்பிரிந்து என்னவென்திருப்பேன்
வோசைகடலமுர் தே
உனக்குயிதுவிதி யோ
எனக்குயிதுசதி யோ
உலகாளும்ரஞ்சித மே



### மன்மதன் சொல் லாவணி

உலகில்வாழ்ந்து படனென்றுபுகழ்ந்து னே
உம்பரனார்மக
கலகஞ்செய்யாதே தடுத்துப்பே சாதே
காமக்களஞ்சியமே

### இரதி சொல் லாவணி

கன்னல்வில்லரசே உன்னையான்பிரிந்து
கன்னிநான் தனித்திருக்கேன்
கடுகிப்போவையானால் பின்வருவேன் றே
காரணவஞ்சியமே

### மன்மதன் சொல் லாவணி

கோ
வருவதுநீதியோ அரிவையர்க்கழ
மானேமடமானே,
வாதுசெய்யாதே ஏதடிமானே
வாரேன் போயினுனே

### இரதி சொல் லாவணி

ஏகிநீர்போனால் யானும்வருவேன்
எண்ணவே முன்னாலே

### இதுவுமது

வில்லெடுக்காதே செல்லஎண்ணாதே னே
தொல்லைவரும்கோ

### மதன் சொல் லாவணி

தொல்லைவந்தாலும் நல்லதென்றெண்ணி
சொல்லையறிந்து வாரேன்
ஒருவர் துரோகஞ் செய்தாலும்
ஏன்திரேகம்போனாலும் சொன்னசொல்லைமறவேன்

## மதன் சொல் ஒப்பாரி

மானேமரகதமே தேனேமடமயிலே
மையல்விழியாளே சையோகமானபெண்ணே
மலர்ந்தசெந்தாமரையே முல்லைமணமுள்ளவளே
மலைநாட்டுச்செந்தேனே புலிநாட்டுவிழியாளே
மஸ்தகமேஎன்னுடையபுஸ்தகமே சொல்வதைக்கே
மனையாட்டி யொருசேதி [ன்
தேவர்வையமதில் ஈவர் தவமிருக்க
மலர்கணையேதொடுத்துத் திருவம்பலத்தவமழித்து
மங்களமாய்வாரேனடி சிங்காரபெண்ரதியே

## மதன் சொல் லாவணி

1. மானேசொல்லுகிறேன் கேளடிதே — னே
வானவர் கோனே
அனழுத்தால்போவது நிஜஞ்சொன்னேன் (மா)

2. தேனேநீமனங் கலங்காதேயிந்திர
தேவர்சபைக்குநா — னே
சென்றுவாரேனடிமா — னே

3 அலங்கிர்தமான மாளிகைதனி — லே
அன்னமேநீயிருந்து எனக்குச்சொல்லி
அனுப்படிநீயுகந்து

4. மேவும்லீலைகள் மனம்வெறுத் — தே
விவரமாகச்சொல் — லு
நீகற்றசபதம் வேண்டாம்நில்லு (மானே)

## பொது வெண்பா

அழுது கலங்கிரதி அங்கமதுகுன்றி
பழுது வருமென்று பாங்காய்—வருந்தியுந்
தஞ்சமென்று தேவரெனைச் சங்கையுடனழைக்கப்
பஞ்சமென்று நில்லேனென் பான்.



## மதன் சொல் லாவணி

பதறியே தேவர்களது—என்னைப்
பார்த்துமேவிருப்பவர்கள் தொழுதுஅடி
பதம்பணிச்சிலையுடனதகு செய்தவமிடைப்
போரேன்—போய்—வாரேன்.

## இரதி

போய்வாரே னென்பதுவும் பொய்யே—பழி
பொல்லாங்கு நேர்வதுமெய்யே—கெட்ட
பேய்க்குண தேவர்கள் வாய்மொழி யதைநம்பி
போனால் வினை நேரும்.

## மன்மதன்

பொல்லாங்குநேரு மெனத்தடுத்து—இப்போ
புலம்பாதே யெந்தனைப் பிடித்து
அல்லல்படச் சிவன்வல்லத் தவமதனை
அழிப்பேன் பழி யொழிப்பேன்.

## இரதி

வல்லவன் தவமழித்து—இங்கு
வருவேனென்றுமே பழித்து - நீர்
வல்லவ னென்றாலே கொல்லுவானுந்தனை
வண்ண மணிக் கண்ணு.

## மன்மதன்

கொல்லுவானென்றுமே அழுது—வல்ல
குமரனைதடுக்காதே தொழுது—அடி
எல்லவரும் போற்ற வல்லவனென்றுமே
வரவேன் முத்தந் தருவேன்.

### இரதி

முத்தந்தருவே னென்னுமுகிலே—நீர்
மொழிவதுநீதியாமோ அதிலே ஐயா
அத்தன் செய்தவமது முத்திவழியென்றே
அறியும் என்னுல் குறிப்பு.

### மன்மதன்

முத்திவழியென்று மொழிந்தாய்—நலன்
முனிவர்கள் படுந்துய ரொழிந்தாய்—அடி
கத்தியேயழுகாதே புத்திமயங்குதே
கனியே யெந்தன் அணியே.

### இரதி

கலங்கித்தவிக்காதே மாரா—மனங்
கட்டுப்படச் செய்யும்வீரா—தேவர்
நலங்கெடவுந்தனைக் கலகங்கள் செய்வார்
நாதா பெரும் வாதா.

### மன்மதன்

கலகங்கள் செய்தாலும் ரதியே—தவங்
சுண்டுமேவருவேன் மதியே—அடி
உலகினிலெனைவிட பலமுள்ளமாந்தர்கள்
உண்டா கரு வண்டா.

### இரதி

பலமுள்ளமாந்தர்களுண்டு—வும்மை
பார்த்துமே தேவர்களண்டி—விட்ட
குலத்தைக்கவர்ந்த நலமிலாவோலையைத்
தள்ளும்மனம் விள்ளும்.



### இரதி சொல்லல்

செங்கண்மால்பெற்றெடுத்த பொங்கமுள்ள அங்கஜ
செப்புவதைக் கேளுமினி தப்பிதங்கள் நேராது [னே
ஜகமுழுதும்மானிடர்கள் அகமகிழ்ந்து அரனென்று
சரணடைந்துதானிருக்க பரனருளையறியாமல்
சேதிவந்ததென்றுசொல்லி வாதிப்பதுநீதியல்ல
ஜடமதுகடைத்தேற இடம்பொருளேவல்வகை
சாஸ்திரங்கள்பாராமல் நாஸ்திகர்போலெண்ணுதே
சதகோடிராட்சதரும் மதமானராவணனும்
சண்டையில் மாண்டாரென்றும்
பண்டைப்பெரியோர் மொழியைச்
சற்றுமேபாராமல் குற்றமதைக்காணுமல்
சத்தியுடனென்தகப்பன் பத்தியாய்செய்தவகை
சாடுவேனென்றுசொன்னீர் நாடுநகரஞ்சிரிக்க
சாம்பலாய்ப்போகுவீர் பாம்புக்கணைமன்மதனே
சகமெச்சவாழ்வோமென்முள் இகபரங்காண்ரதியாள்

### மன்மதன் சொல் ஒப்பாரி

அரிமாலீன் றெடுத்த பரிபாலஅங்கஜர்க்கு
அண்டர்சபைக்கேக ஆபரணமெல்லாமணிந்து
ஆயுதங்களையெடுத்து ஆரடாதேவவசந்தா
அழகுகிளிவாகனத்தை அதிசயமாசோடித்து
அரைநொடியில்வாவெனவே அப்பவேதேவவசந்தன்
அடிகட்டுபொன்னுலே அச்சுதட்டுமுத்தாலே
ஆடுமகரக்கொடியை அதிலேறக்கிக்கட்டி
அனேகவிதமாய்ரதத்தை அலங்கரித்துஅங்கஜனும்
அருகையிடமன்மதனும் அணிபொன்தேர்மேல்
அமரிக்கையாயேறி அரிவையர்புடைசூழ

அன்னரதியைப்பார்த்து அமர்தபசுங்கிளியே
அபரஞ்சிப்பொக்கிஷமே அமரரிடம்போய்நானும்
அரைநொடியில்வாரேன்டி யஞ்சாதேபெண்ணே
என்று, அனேகபுத்திமதிகள் சொல்லயண்டங்கிடுகி
டென்ன, அலைகடலும்கலங்க அகிலமெங்குங்குலுங்க
அவசரமாய்ப்போ கலுற்ருர் அரிதிருமால்தன்மகனும்

மன்மதன் வழியில் காணும் சகுனம்

சன்னிரதியாளைவிட்டுஉன்னிதமாமன்மதனும்
காரியமாய்த்தேரேறி வீரியமாய்ப்போகையி லே
காகங்கத்திடவே நாகங்கள்சீறிட வே
கரும்பூனைக்குறுக்கிடவே பெரும்பன்றிஓடிட வே
காட்டானைக்கத்திடவே கோட்டானடித்திட வே
கம்மாளன்நேர்வரவே சும்மாவண்ணானழ வே
கரடிபுலிவேங்கையழ குருடிவடமாடிவிழ
காட்டில்நாற்காலிகளை மொட்டைப்பார்ப்பானெடுத்து
கதறிபதறிவிழ எதிரிலாந்தைகுமுற
கருத்தபுடவைகட்டி வருத்தமுடனேயொருத்தி
கையறைந்துபூமியிலே மெய்மறந்துவோலமிட
கண்ணைக்கலங்கிவர எண்ணெய்க்குடமுடைய
கருவாடுகட்டுவர முறைபாடுபட்டுவிழ
கருங்குருவியும்பதற பெரும்பாளையுமுருள
காணுதசகுனமெல்லாம் தோணவேபார்த்துமதன்
கண்ணே கலங்கியப்போ
எண்ணுத யெண்ணமெல்லாம்
கருத்திலே தான் நினைத்து
வருத்தமுடனே யிந்திரனும்
கனகசபை தனிலேவந்து
விசனமுட னேதுசொல்வார்



தேவேந்திரன் மன்மதனுக்குச் சொல்லல்

மன்னுயெனையழைத்த தென்னுவெனயிந்திரன்
மாரனேகேளுமுபகாரனே என்வார்த்தை
மாமணாந்திவண்ணன் சோமசுந்திரன் திரிநேத்திரன்
மகாதேவர்வையமதில் ஜெகநாதன் தவமிருக்க
மயங்கியிந்திரலோகம் தயங்கியனல்பற்றுதென்று
மாதவனர் தபசை ஏதென்றுசொல்வோமையா
மனங்குலைந்து தேவாயெங்கள்
கனங்குலைந்து நின்ருேமையா
மங்கைரதிகணவா செங்கரும்புவில்லோனே
வானவர்தன்னிடுக்கம் சேனநாள்பாதையையா
மாதவரீன்றமன்னு ஏதொன்றும்நினையாதேகண்ணு
மதிவதன கெம்பீரா
உனைக்கெதியென்று நம்பியேதாமழைத்தேன்
மங்கவேநீரழித்துச் சிங்காரப்படையுடனே
மங்களமாய்வாருமையா செங்கரும்புவில்லோனே

நந்திதேவனுக்கும் மன்மதனுக்கும் தர்க்கம்

நந்திதேவன் சொல்லல்

பச்சைநிறமுடனே வுச்சிதமாய்த்தேரேறி
பரமன்கயிலையருகே அறியாமல்போவதற்கு
பயமில்லாமல்வந்தவனர் நலமுடன்செப்பிவிட்டுப்
பதனமாயோடுமென்று நந்தியுமுறைக்கலுற்ருர்

மன்மதன் சொல்லல்

நந்தியுரைகேட்டு விந்தையுடனங்கஜனும்
நறுமலர்க்கணை யெடுக்கும்
பெருமையுள்ள மாரனென்று
நானிலமறிந்திருக்க வீணிலேவழிமறித்து
நடக்காதே யென்றுசொன்னீர்
திடமுடன் கொல்வேனென்ருன்



ஈஸ்வரன்மேல் மதன் கணை தொடுத்தல்

மகாதேவர்வையமதில் அய்யன்தவமிருக்க
மலர்கணையே யெடுத்து
மதனுலக மெல்லா ந்தத்தளிக்க
மண்டியிட்டுத் தானெழுந்தார்
அண்டர்கோன் சொல்கேட்டு
உமாபதியின்தவசருகே பூமாரன்வந்துநிற்க
மனங்கலங்கி தவமழிக்க
குணம்கொண்டு நிற்கையிலே
மருத்துவ நந்தீஸ்வரர் வருத்தபுத்திகேளாமல்
மலர்க்கணையையேவினதா லுலகநா தன்தடுத்து
மட்டுபடா நெற்றிக்கண்ணை
அவர்திட்டமுடன் தான்திறந்தார்
மங்கைகரதிமணவாளன் அங்ஙனமேபஸ்பமானார்



மாதர்படைகலகலத்து ஏதுநாம்செய்வோமென்று
மாதர்களினைவோருமாய் வேதனைக்குள்ளாகி
மங்கையேசெங்கமலம் எங்கேயடிமன்மதனார்
மாயமாய்ப்போனாரடி நேயசிவன்கண்ணாலே
மன்மதசிகாமணியை இந்நிலத்தில்சோரவிட்டோம்
மங்கைரதி தான்கேட்டால்
அங்கம் பதறிடுவாள்
மன்மதரைத்தான்பிரிந்து சென்மம்தரித்திருக்காள்
மாதரசேவாருமடி ஓதுவோம்ரதிதனக்கு
மார்க்கமாய்ப்போகலுற்றார் ஆரோக்கியமாபுரமே

தாதிகள் சொல் ஒப்பாரி

என்ஜோடுப்பெண்டுகளா இளவாழைத்தண்டுகளா
காமவள்ளிக்காரணத்தைக் கடுகவுரைப்போமென்று
காடுவனங்கடந்து காண்முத்தாடமேவிட்டு
கதிர்சிறந்தபூமிவிட்டுக் கன்னிரதிவீற்றிருக்கும்
காவடிமாஞ்சாவடியில் கைகட்டிவாய்பொத்தி
கன்னியர்கள் நின்றார்கள்
கன்னிரதிதான்பார்த்துக் கனகமாயேதுசொல்வாள்
கண்ணேயென்மன்மதன் காரணத்தைச்சொல்லுமடி
காமவள்ளிவீரவள்ளி கட்டழகிதாதிகளா
காமனெரிந்தாரா கண்டீரோபெண்டுகளா
கடுகவுரையுமென்று கன்னிரதிகேட்கையிலே
கட்டழகிதாதிகளுங் காமனார்சேதிசொல்ல
கலங்குதம்மா எங்கள்மனம்
கபாலமிலதன்னில்நின்றுகடவுள்தவம்புரியவேதான்
காமனுந்தானெனவே கரும்புசிலைவளைத்துக்
கருவண்டல்நாணி தொடுத்தாரம்மா
கடவுளருங்கோபமதாய்க் கருதித்தானெரித்தாரம்மா

கயிலாசபதி முன்பாக
கண்டுவந்தோ மென்றுரைத்தார்
காதலிமார் பெண்டுகளும்
கன்னிரதிதேவியரும் காதினுல்தான்கேட்டுக்
கலங்கியேகீழ்விழுந்து கன்னிரதியேதுசொல்வாள்



## இரதி கனவு கண்டு சொல் ஒப்பாரி

கல்லிழைத்தபஞ்சவர்ண கனகசபாமண்டபத்தி ல்
கனமுத்துஆலமெத்தை கட்டிலின்மேல்படுத் து
கன்னிரதிதேவியரும் கனவுகண்டுமெய்மறந் து
கடுகயெழுந்திருந்து கண்ணீர்சொறிந்திடவு ம்
கருங்கூந்தலைவிரித்துக் கைரெண்டையும்நெறித் து
கலங்கியேகீழ்விழுந்து கதறியேதானுரைப்பா ள்
காத்திருக்கும்தாதிகளா கங்காதரனிடத்தி ல்
காமனும்போய்நின்று கணையேதொடுத்திடவும் ம்



கண்டபரனுக்குக் கடுங்கோபம்வந்திடவு ம்
கண்ணைத்திறந்திடவும் கனலாயெரிந்திடவு ம்
கம்மனுட்டிகள்கூடி கடுகயெனையழைத் து
கங்கைகரையோரம்போய் கழுத்திலணிந்திருக்கு ம்
கனகமணிதாலிதனைக் கத்தியாலேநீரறுத் து
காராம்பசுவின்பாலில் காண்பித்துப்போட்டிடவு ம்
கைவளையலத்தனையுங் கல்லின்மேல்நெறித்திடவு ம்
காதோலைகரிமணியுங் கழற்றிஎறிந்திடவு ம்
கரையில்லாவெண்புடவை கட்டியெனைத்தழு வ
கதறியழுதிடவும் கனங்குறைந்துவாடிடவு ம்
காணுசகுனமெல்லாம் கண்டனடியிப்பொழு து
காலமெல்லாமென்னைக் காப்பாற்றுவாரென் று
கருத்திலெண்ணியிருந்தே ன்
கழுத்தையறுத்துவிட் டு
கனலாயெரிந்துசுட்டு கைசோரவிட்டார டி
காமக்கலைகள் தீரகட்டிலின்மேல்படுத் து
கும்பஸ்தனத்தைக் கையிலேபிடித் து
மனுமுதல்நூல்முழுதுங் கண்டுலீலைசெய்பவரா ர்
கட்டியணைப்பவரார் கனிமுத்தஞ்செய்பவரா ர்
கண்ணீர் துடைப்பவரா ர்
கார்க்கச்சொந்த முள்ளவரா ர்
காதாலேகேழ்ப்பவரார் கண்டுபசப்பவரா ர்
காமன்தீயாலெரிந்து கணவனையுந்தான்பிரிந் து
காருலகிலிருந்து கண்டபலனைப்பிரிந் து
கனகமணி பெண்ரதியா ள்

## இரதி சொல் லாவணி

அன்னமே என்மனம் உருகுதென்னடி
தாதி அடிதாதி அவர்

ஆசையானமதன் மோசம்போனரடி
தாதி அடி தாதி

தாதி சொல் லாவணி

மோசமில்லையம்மா தாதி சொல்லுமொழி
கேளாய் மொழிகேளாய் அவர்
ஆசையானமதன் நேசமாக
வருவாரே வருவா ரே

இரதி சொல் ஒப்பாரி

வருவார் வருவாரென்று
திறமையுடன் சொல்லவந்தாய்
என்னை மருகியணைந்தவர் தான்
புரியவந்த காரணத்தால்
மடிப்புவந்து நேர்ந்ததடி கொடிபழமன்மதற்கு
மாயமோஎன்சாமி நியாயமோபூமானே

இரதி சொல் லாவணி

மாய்ப்பனென்னுயிரைக் காய்ப்பரெந்தணலை
மூட்டி அடி மூட்டி
எந்தன்மாயன்பெற்றமதன் நேயமா
வரக்காணேன் வரக்காணேன்

தாதி சொல் லாவணி

அபாயமென்னம்மா வுபாயமாக
வருவாரே வருவாரே



இரதி சொல் லாவணி

விலம்பாதேபுலம்பாதே என்று சொல்லும்செங்கமலம்
என்புத்திக்கிசைந்தவரை நித்திரையில்நான்மறவேன்
பெருகுமூலைவெம்புதடி உருகுதடிகாமவெள்ளம்

இரதி சொல் லாவணி

பிறந்தபோதிலென்னை வருந்திமாலையிட்ட
காமா ஓய் காமாநீ
இறந்தபோதுநானிருந்து என்னசெய்வேன்
காமா ஓய் காமா

தாதி சொல் லாவணி

இறந்துபோனரென்று மறந்துசொல்லவேண்டாம்
தாயே அடி தாயே
அந்த அரனுர் தவமழித்து அருகினில்
வருவாரே வருவாரே

இரதி சொல் லாவணி

அரனுர்தவமழித்து அருகினில்வருவாரென்று
பருவமொழி சொல்லவந்தீர்
அரன்பக்கம்போனமைந்தர் திரும்பிவரப்போறதில்லை
அறிவுள்ளசெங்கமலம் திரணியமாய்க்கேளுமடி.

இரதி சொல் லாவணி

அன்னமானே கிளிதன்னைக் கொண்டுவா டி.
தாதி அடி தாதி
எந்தன் சொர்னமானே மதன்தன்னை கண்டுகூட்டி.
வாரேன் கூட்டி வாரேன்

### தாதி சொல் லாவணி

கூட்டிவாரேனென்று மேட்டிமையாய்
சொல்லலாமோ சொல்லலாமோ
மாட்டிலேறுமீசன் காட்டிலோட்டிப்போனான்
தாயே அடி தாயே

### இரதி சொல் ஒப்பாரி

மாட்டிலேறுமீசன் காட்டிலோட்டிப்போனானென்று
வாட்டமது சொல்லவந்தாய்
கஞ்சாவெறியினால் அஞ்சாதமன்மதரைக்
கருகியெரித்தானா முடுகியசெங்கமலம்

### இரதி சொல் லாவணி

கையுஞ்சோருதடி மெய்யுஞ்சோருதடி
தாதி அடி தாதி
மையல்தீர்க்குமதன் நேசமாகவரக்
காணேன் வரக் காணேன்

### தாதி சொல் லாவணி

வரக்காணோமென்றுசொல்லி
வருந்திப் புலம்பவேண்டாம்
தாயே அடி தாயே
பரமசிவன் தவசைத் திறமையுடனழித்து
வருவாரே வருவாரே





### இரதி சொல் ஒப்பாரி

ஆரடிதாதிகளா ஆரணங்கேசொல்லுகிறேன்
செங்கமலத்தாதிகளா சேதிவந்துகேளுங்கடி
ஆரியடிவீரியடி ஆபரணசோலையடி
முத்துமுதலையடி மோகனப்பெண்மயிலே
சித்திவிரத்தினக்குயிலே சிங்காரவன்னங்களே
சீரால்பெருத்தயெந்தன் தேசிகனாரென்கணவன்
அப்போதுஈஸ்வரனார் ஆராய்ந்துபாராமத்
நெத்தியின்கண்திறந்து நேராகப்பார்த்திடவே
ஆணழகரென்கணவன் ஆனலாயெரிந்தாரடி
என்றைக்குக்காண்பனடி என்சோட்டுத்தாதிகளா
காலைக்கடுக்குதிப்போ கணுக்கால்சுழலுதடி
சுருள்-முப்பத்துமுக்கோடிமுனிவர்களும்தேவர்களும்
நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளுந்தபோதனரும்
இத்தனைப்பேர்பார்த்திருக்க யெக்கியமாய்வளர்த்தி
முன்னூறுபிராமணர்கள் முகூர்த்தமிட்டமங்கிலியம்
ஐந்நூறுபிராமணர்கள் அள்ளியிட்டமங்கிலியம்

தொண்ணூறுபிராமணர்கள் தொட்டுவிட்டமங்கிலி
வசிஷ்டரும்நாரதரும் வாங்கிவிட்டமங்கிலியம் [யம்
மகுடமன்னர்கள்வந்து மன்னனைத்தான்பார்க்க
பட்டைகழட்டுங்கடி பழந்துணியைத்தாங்களடி.
சேலையவுருங்கடி சித்தாடைத்தாங்களடி
கெந்தகமும்சந்தனமும் கைதனிலேபூசுங்கடி
மஞ்சளரையுங்கடி மார்மீதில்சாற்றுங்கடி
பாப்பானைக்கூப்பிடுங்கள் பால்சடங்குசெய்யுங்கடி
ஐயரைக்கூப்பிடுங்கள் அன்னரதிபெண்ணுளுக்கு
அருங்கழுத்துநூல்வாங்க அல்லவரும்வாங்களடி
அலறிப்புரண்டழுதாள் அன்னரதிதேவியரும்

## இதுவும் ரதி புலம்பல்

என்பத்தாயிறந்தபோது பாங்கிகளா தோழிகளா
எனக்கொத்தாசை யாருமில்லே
பாலுங்கசக்குதடி பழமும்துவர்க்குதடி
பாக்குவெத்திலே தின்பதில்லே
தூக்கம்மெத்த வருவதில்லே
பத்தாவைப்போல்வந்து பதியைக்குலைக்குதடி
பட்டுரவிக்கையது விட்டுத்தெருக்குதடி
பட்டைஅவுருங்கடி பழந்துண்டைத்தாருங்கடி
என்சரிகைஅவுருங்கடி என்சஞ்சலத்தைதீருங்கடி
என்தாலியைத்தான்வாங்கத் தாதனைக்கூப்பிடுங்கள்
என்மங்கிலியந்தான் வாங்கலிங்கரையேகூப்பிடுங்கள்
யான்பாவிபெண்பிறந்த அதிசயத்தைகேளுங்கடி

## தங்கப் பெண் லாவணி

1 ஆசைக்கழுதாலும் ஆகாதுன்னா தி
அவர் அழகை நினைத்துக்கொண்டா ல்
என்தாதிகளா அங்கம்பதருத டி



2 மோசஞ்செய்துள ளை
மூடிக்கழுத்தறுத் து
வாசவன்போனநாளா என்தாதிக ளா

3 அன்னநடையழகு ம்
அழகுதிருமுகமு ம்
சின்னமொழியழகும் என்தாதிக ளா
தெரிசிப்பதெக்கால மோ

4 சின்னவயது தன்னி ல்
சேர்ந்துஅணையாம ல்
என்மன்னரெரிந்தாரடி என்தாதிக ளா
மதிமோ சம்வந்துத டி

5 இப்பார்தன்னிலே யெவருந்துணையில் லே
இப்படிக்கு என் தலையில் என்தாதிக ளா
எழுதினுனே பிரமனு ம்

6 அப்பாவுசொன்னது அருமைமொழியென் று
கொப்பெனவோடி தேடி என்தாதிக ளா
கூப்பிட்டு வாருங்கள டி

## இரதி புலம்பல் ஒப்பாரி

தனகோட்டிபுண்ணியகோட்டிகனகாபிஷேகவல் லி
நவநேமிஅபிராமி சிவகாமிதிருநா மி
தனபூஷணிபாஷிணி கல்யாணிநாராய ணி
தருகோமளாங்கிசின்னி திருக்கோலபூங்குழ லி
சற்குணமுத்துகிருஷ்ணி பற்குணிவிசாலாட் சி

சரசகலா நித்தியசொல்லி பரசமணிவச்சிராங் கி
சுந்தரவதனசிலப்பி சுந்தரவிசாலாட் சி
சாருபசுந்தரமே சிர்பெற்றமீனாட் சி
தங்கம்ஸ்திரீரங்கம் செங்கமலாட்சிய ரே
பாங்கிமோ கனங்கியே என்பாங்கிகளா வாங்கள டி
தர்மதுரையென் கணவன் மர்மமாயென்னைவிட் டு
சனியான இந்திரன் தன் அனியாயசொல்கேட் டு
சண்டாளன்தகப்பன் பண்டாரத்தின் தப சை
தானழிக்கவேபோய் தேனிழைந்தசபைபோ ல்
தத்தளித்துமாண்டாரடி பற்றுதடி யென்வயி று
சகித்திருக்கக்கூடலியே சுகித்திருக்கநாடலை யே
சஞ்சலத்துள்ளானேனடி நெஞ்சம்தடுமாறுத டி
சதிவந்துசேர்ந்துதடி மதிகெட்டுபோனத டி
சாரமுமிழந்தனடி வெறிபிடித்துநின்றன டி
சாயமஞ்சள்போச்சுதடி ஞாயமெங்கேசொல்வன டி
தந்திரமேவந்துதடி வெறிபிடித்துநின்றன டி
தர்மமெங்கேபோச்சுதடி கர்மம்வந்துவாய்த்துத டி
தாலியுமிழந்தனடி ஓலையில்பிறந்தன டி
தாழ்வாகபோனனடி வாழ்வில்குறைந்தன டி
தரையிலிருக்கனடி அறையில்படுக்கன டி
தணலாயெரியுதடி பிணம்போலேநின்றன டி
தங்கநகைபோச்சுதடி குங்குமம்குலைந்தத டி
தண்ணீரிலேவிழுந்து மண்ணுக்குள்ளேவிழுந் து
சடலத்தைஒழிப்பேனென்று திடுக்கெனவேபிரண் டு
தனிமனம்நொந்து அலரியேகீழ்விழுந் து
தரையிலேகையறைந்து அறையில்பட்டுசரிந் து
தயங்கியழுதுகொண்டு மயங்கியேதுரைப்பா ள்



## இரதி புலம்பல் ஒப்பாரி

மதுரமுள்ளதாதிகளா அதரங்கொடுத்தமத ன்
மரித்திடவுந்தாலித னை
அறுத்திடவும் முண்டையென் று
குறித்திடவுங் கண்டவர்க ள்
சிரித்திடவு மெந்தன்மன ம்
வெறுத்திடவு முன்போ லே
மங்கையவர்கள்தாலிதனை எங்கேபறித்தே னே
மஞ்சள்குங்குமமிட்டவர் நெஞ்சுகுலைத்தே னே
மாலையறுத்தேனே ஓலைகிழித்தே னே
மாதவயோகிதன்னை வாய்திட்டிவைதே னே
வாக்காலடைத்தேனே தீத்தளவுசெய்தே னே
வண்ணார்க்கும் நாவிதர்க்கு ம்
பெண்ணான் மருத்துவர்க்கு ம்
வாத்தியார்பண்டிதருக்கும் கீர்த்தியாய்கூலித னை
வஞ்சனைசெய்தடுத்துக் கெஞ்சவடித்தே னே
வளரும்பயிருக்குத் தளரவிடாமல்நீ ர்
வாடச்செய்தே னே
மாடப்புறவிரண்டை ஜோடிகலைத்தே னே
மானவிட்டநதியில் ஸ்நானங்கள்பண்ணினே னே
மாதாபிதாகுருவைச் சூதா கவைதே னே
மடிபசுவின்பாலைத் துடிப்பாயுதைத்தே னே
தாழ்வாயென் கணவரிடம் வாதுபுரிந்திட்டே னே
ஏதேதுசெய்தேனே மணவாளனைப்பிரிந் து
பிணம்போல நின்றன டி
மதிமயங்கலாச்சுதடி விதியோயென்கர்மம டி

மாயமாய்வந்துதடி காயம்வைத்திருக்கன டி
மன்னவனுந் தானெரிந் து
ஜென்மம்வைத்து யானிருந்தா ல்
மதிப்பாரோபூவுலகில் சதிகாரியானேனென் று
விண்ணில்விழுந்தழுது கண்ணில்உதிரம்குழைத் தி
மாங்குயிலாள்பெண்ரதியும் ஏங்கியழுகலுற்ரு ன்

பலபேர் பாடிய ஒப்பாரி

முற்றிற்று.